செ.வெ.எண்:71 நாள் : 30.06.2017

# கரூர் மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்க திட்டத்தில் கீழ் தொகுப்பூதிய அடிப்படையில் தற்காலிக கணினி விவரப் பதிவாளர், பள்ளி மேலாண்மைக்குழு கணக்கர்கள் நியமனம் – மாவட்ட ஆட்சியர் தகவல்

கரூர் மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், மாவட்டத்திட்ட அலுவலகத்தில் கணினி விவரப்பதிவாளர் 1 பணியாளர் நியமனம் செய்யப்படஉள்ளது. (தொகுப்பூதியம் ரூ.10000/–) இப்பணிக்கு இளங்கலைபட்டம், தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலைமற்றும் MS Office ல் சான்றிதழ் ஆகிய தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். வட்டார வள மையங்களுக்கு முற்றிலும் தற்காலிக தொகுப்பூதிய கணினிவிவரப் பதிவாளர் 2பணியாளர்கள் (தொகுப்பூதியம் மாதம் ரூ.8400/–) நியமனம் செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு +2 தேர்ச்சி, தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை மற்றும் MS Office ல் சான்றிதழ் ஆகிய தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். பள்ளி மேலாண்மைக்குழு கணக்கர்கள் 6 பணியாளர்கள் (தொகுப்பூதியம் ரூ.9900/–)நியமனம் செய்யப்பட உள்ளது. இப்பணிக்கு B.Com with Tallyதேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவம் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், அனைவருக்கம் கல்விஇயக்க அலுவலக அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கு வயது 01.07.2017 அன்று 35 வயது மிகாமலிருக்க வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 10.07.2017 (மாலை 5.45 மணிக்குள்) நேரடியாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ அனுப்பி வைக்க வேண்டும் என கரூர் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு – செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர் .**